நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

First Published : 07 May 2010 12:48:04 AM IST

சிதம்பரம், மே 6: மின்வெட்டை கண்டித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் சிதம்பரம் கோட்ட மின்வாரிய அலுவலகம் முன் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

÷மாவட்ட துணைத் தலைவர் டி.ராஜராமன் தலைமை வகித்தார்.

மாவட்டத் தலைவர் நாராயணன், ஜனநாயக வாலிபர் சங்க மாவட்ட துணைச் செயலர் வாஞ்சிநாதன், ஜின்னா உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

**நெல் அரவைக்கு குவிண்டாலுக்கு ரூ.25 வழங்க வலியுறுத்தல்**

First Published : 07 May 2010 01:38:01 AM IST

தருமபுரி, மே 6: நெல் அரவை செய்வதற்கு குவிண்டாலுக்கு ரூ.25 வழங்க வேண்டும் என்று தருமபுரியில் வியாழக்கிழமை நடைபெற்ற தருமபுரி நெல் அரவை முகவர்கள் சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கூட்டத்துக்கு சங்கத்தின் தலைமை நிர்வாகி பி. பாஸ்கர் தலைமை தாங்கினார். மாவட்டத்தில் உள்ள 94 அரவை மில் மூலம் மாதம் தோறும் 40 ஆயிரம் டன் அரிசி அரவை செய்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

இத்தொழிலை நம்பி 5 ஆயிரம் தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில், நெல் அரவைக்கு குவிண்டாலுக்கு ரூ.25 வழங்க அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

மாவட்டச் செயலர் டி.வி. புருசோத்துமன், பொருளர் டி.என்.வி. வினுபாஜ் ராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**நானோ தொழில்நுட்ப கருத்தரங்கம்**

First Published : 07 May 2010 01:37:48 AM IST

தருமபுரி, மே 6: தருமபுரி, நல்லானூர் ஜெயம் பொறியியல் கல்லூரியில் நானோ தொழில் நுட்பக் கருத்தரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி துணை முதல்வர் ஜி. தொல்காப்பியஅரசு கருத்தரங்கை தொடங்கி வைத்தார். இதில் ஜப்பானில் பணிபுரியும் பேராசிரியர் பி.வெங்கடேசன் பேசியது, கணினி தொழில்நுட்பத்துக்குப் பிறகு நானோ தொழில் நுட்பம் அனைத்து நாடுகளிலும் வேகமாக வளர்ந்து வருகிறது. ஜப்பானில் இத்தொழில் நுட்பம் குறித்து அதிக அளவில் ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. இதனால் இத்தொழில் நுட்பத்தை நன்கு கற்பவர்களுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது என்றார் அவர்.

கருத்தரங்கில் 200-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். சென்னை அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் ஏ. கலாநிதி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**விவசாயத்தில் மீண்டும் மறுமலர்ச்சி ஏற்படும்: வேளாண் விற்பனைக் குழுத் தலைவர் பேச்சு**

First Published : 07 May 2010 08:31:55 AM IST

மதுரை, மே 6: விவசாயத் துறையில் மீண்டும் மறுமலர்ச்சி ஏற்படும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்று, வேளாண் விற்பனைக் குழுத் தலைவர் இரா. கணேசன் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு வேளாண் துறை சார்பில், வேளாண்மை மற்றும் விவசாயிகள் வளர்ச்சிப் பணிமனை மற்றும் கண்காட்சி, மதுரை வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் மே 2}ம் தேதி தொடங்கி மே 6}ம் தேதி வரை நடைபெற்றது. வியாழக்கிழமை நடைபெற்ற நிறைவு நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இரா.கணேசன் பேசியதாவது:

முன்காலத்தில் விவசாயத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வந்தது. பின்னர், விவசாயம் பின்னுக்குத் தள்ளப்பட்டது. இப்போது, கணினித் துறை முன்னிலை வகிக்கிறது. மீண்டும் விவசாயம் முதலிடத்தைப் பெறும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் பற்றி விவசாயிகளுக்கு நாம் எடுத்துக்கூற வேண்டும். செம்மை நெல் சாகுபடியில் 20 சதவிகித மகசூல் கூடுதலாகக் கிடைப்பதாகச் சொன்னாலும், இன்னும் அது பெரும்பாலான விவசாயிகளைச் சென்றடையவில்லை.

புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்தலாம் என்று நினைத்தாலும் அதற்கு இடையூறாக நடவு இயந்திரங்கள் கிடைப்பதில்லை என்ற புகார் உள்ளது. எனவே, விவசாயத்துக்குத் தேவையான புதிய தொழில்நுட்ப இயந்திரங்கள் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

சொட்டு நீர் பாசனம் குறித்து விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்ச்சி இல்லை. இந்த பாசன முறை 20 ஆண்டுகளுக்கு முன்பே இஸ்ரேலில் நடைமுறைக்கு வந்துவிட்டது. அவர்கள் மிகப்பெரிய பரப்பளவில் சொட்டு நீர் பாசனம் செய்து வருகின்றனர். நாமும் இத் தொழில்நுட்பத்தை அறிந்துகொண்டு சாகுபடி செய்ய முன்வரவேண்டும்.

நாட்டில் தற்போது 120 கோடி மக்கள் இருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் தேவையான உணவு கிடைக்கும் வகையில் விவசாயத்தில் நாம் தன்னிறைவு பெறவேண்டும். மீண்டும் மறுமலர்ச்சி ஏற்படும்போது இது சாத்தியமாகும் என்றார்.

வருமானவரித் துறை அதிகாரி கிருஷ்ணசுவாமி பேசுகையில், விவசாயம்தான் நம் நாட்டின் முதுகெலும்பு. ஆனால், அதற்குரிய முக்கியத்துவம் தரப்படாதது கவலை அளிக்கிறது. உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் போன்றவற்றால் விவசாயிகள் படும் துன்பம் சொல்லிமுடியாது. பி.டி. கத்தரிக்காயை இந்தியாவில் திணிக்க பல சக்திகள் முயன்று வருகின்றன. விவசாயிகள் இதை எதிர்த்துப் போராட வேண்டும்.

மத்திய, மாநில அரசுகள், பத்மஸ்ரீ, பத்மபூஷண், கலைமாமணி போன்ற விருதுகளை பல்வேறு கலைஞர்களுக்கும் வழங்கி வருகிறது. ஆனால், வேளாண் விஞ்ஞானிகள் எத்தனைப் பேருக்கு இது போன்ற விருதுகள் வழங்கப்பட்டுள்ளன என்று பார்த்தால் கேள்விக்குறிதான் எழுகிறது என்றார்.

தென்மண்டலத் தலைமை அஞ்சல் அதிகாரி செல்வகுமார் பேசுகையில், இன்றைய சூழ்நிலையில் சாகுபடி பரப்பளவு நாளுக்கு நாள் குறைந்து வருவதால், உற்பத்தி பாதிக்கப்படுகிறது. விலைவாசி உயர்வுக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

எனவே, விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களை தெரிந்துகொண்டு, இருக்கும் நிலத்திலேயே சாகுபடி செய்து உற்பத்தியை அதிகரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

திட்ட இயக்குநர் சங்கரலிங்கம் பேசுகையில், தமிழ்நாட்டில் "ஆத்மா' திட்டம் 2006}ல் சேலத்தில் தொடங்கப்பட்டது. மதுரையில் இத்திட்டம் 2008}ல் அறிமுகமானது. விவசாயிகள் என்ன பயிரிட விரும்புகிறார்கள், எத்தகைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால் பலன் பெறமுடியும் என்று தெரிவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். விவசாயிகள் விதை நேர்த்தி, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து முறை, பயிர் பாதுகாப்பு, நீர்ப்பாசன முறை இவற்றுடன் நவீன தொழில்நுட்பங்களையும் நன்கு தெரிந்துகொண்டு செயல்பட்டால் மகசூலை அதிகரிக்க முடியும் என்றார்.

வேளாண் கல்லூரி முதல்வர் வைரவன் பேசுகையில், ஆத்மா திட்டத்துக்கு ரூ. 210 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக் கண்காட்சியை 6 ஆயிரம் பேர் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர் என்றார்.

இந்த நிகழ்ச்சிக்கு, முதல்வர் வைரவன் தலைமை வகித்தார். மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஏ.பி. ராஜேஸ்வரி உள்ளிட்டோர் பேசினர். முன்னதாக, துணை இயக்குநர் சேவுகப் பெருமாள் வரவேற்றார்.

துணை இயக்குநர் சம்பத் நன்றி கூறினார்.

**புதிய சாகுபடி தொழில் நுட்பங்களை ஆர்வமுடன் கேட்ட விவசாயிகள்**

First Published : 06 May 2010 12:43:10 PM IST

மேலூர்,மே 5: மதுரை வேளாண்மைக் கல்லூரியில் நடைபெற்றுவரும் கரீப் பருவ வேளாண் வளர்ச்சி மற்றும் கருத்தரங்கப் பணிமனையில் செம்மைநெல் சாகுபடி மற்றும் நவீன வேளாண் கருவிகள் செயல்பாடு குறித்து, விவசாயிகள் ஆர்வமுடன் கேட்டறிந்தனர்.

இதுகுறித்து, மதுரை வேளாண்மைத்துறை இணை இயக்குநர் ப.சங்கரலிங்கம் கூறியதாவது:

வேளாண்மையில், தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய சாகுபடித் தொழில்நுட்பங்களை, அனைத்து விவசாயிகளும் நேரடியாக அறிந்துகொண்டு, தங்கள் நிலத்தில் செயல்படுத்தும் வகையில், இந்தக் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கி புதன்கிழமை வரை மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர், கண்காட்சியைப் பார்வையிட்டு பயன்பெற்றுள்ளனர்.

வியாழக்கிழமை இப்பணிமனை நிறைவடைகிறது.

தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, விதைச் சான்றிதழ், பட்டுப் பூச்சி வளர்ப்பு, கால்நடை, மீன்வளம் ஆகிய துறையினர் இணைந்து, வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் இந்த பணிமனையை நடத்துகின்றனர்.

அந்தந்த வட்டார அளவிலான விவசாயத்துக்குத் தேவையான கோடை உழவு, விதை நேர்த்தி, விதையைக் கடினப்படுத்துதல், கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு, செம்மை நெல் சாகுபடி, களையெடுத்தல், மானவாரி விதைப்பு மற்றும் பின்செய் நேர்த்தி, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், அறுவடை, அதன்பின் மதிப்புக் கூட்டுதல் ஆகியவை பற்றி வேளாண் அதிகாரிகள் எடுத்துக் கூறியதுடன், நவீன கருவிகளைக் கொண்டு செயல்விளக்கமும் அளித்தனர்.

மேலும் விவசாயிகள் நேரடியாகவும் தங்கள் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டனர்.

**ஏப்.29 விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

First Published : 06 May 2010 11:49:37 AM IST

திண்டுக்கல், ஏப். 26: திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், வரும் வியாழக்கிழமை (ஏப்ரல் 29) நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் மா. வள்ளலார் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற உள்ளது.

அன்றைய கூட்டத்தில் ஏற்கெனவே விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது விவாதிக்கப்பட உள்ளது.

எனவே விவசாயிகளும், விவசாய சங்கப் பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**கரும்பில் இடைக்கணுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்துவது எப்படி?**

First Published : 06 May 2010 09:47:33 AM IST

சங்ககிரி, மே 5: கரும்பு பயிரில் இடைக்கணுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்தும் வழி முறைகள் குறித்து, சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியுள்ளது:

கரும்பு நட்ட 4 மாதங்களுக்கு மேல் அறுவடை வரை இடைக்கணுப்புழு தாக்க வாய்ப்புள்ளது. கரும்பின் இடைக்கணுப் பகுதியில் இப் புழுக்கள் துவாரங்கள் ஏற்படுத்துவதால் அதன் வழியாக கரும்பின் தசை சக்கைகள் வெளிவரும். பாதிக் கப்பட்ட கரும்பின் மேல் மற்றும் கீழ் உள்ள பருக்கள் முளைத்து வெடிக்க ஆரம்பிக்கும். பாதிப்பு அதிகமானால் கரும்பு காயத் தொடங்கி மகசூல் குறைந்து, சர்க்கரைச் சத்து பாதிக்கப்படும்.

இதைக் கட்டுப்படுத்த முட்டை ஒட்டுண்ணியான டிரைக்கோகிரம்மா கைலோனிஸ், ஏக்கருக்கு ஒரு சி.சி என்றளவில் நட்ட 4 மாதங்களில் தொடங்கி 15 நாட்கள் இடைவெளியில் குறைந்தது 6 முறை விட வேண்டும். மேலும் நட்ட 5-வது மாதம் காய்ந்த சருகுகளை உரிக்க வேண்டும். கரும்பு சாயாமல் விட்டம் கட்ட வேண்டும்.

வயலில் நீர் தங்கினால் வடிகால் வசதி செய்ய வேண்டும். கரும்பு இடைக்கணுப் புழுக்களைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண் ணிகள் பவானிசாகர் மற்றும் மோகனூர் கரும்பு ஒட்டுண்ணி நிலையங்களிலும், கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திலும் கிடைக்கும்.

இம் முறைகளைக் கடைப்பிடித்து இடைக்கணுப் புழுக்களைக் கட்டுப்படுத்தி விவசாயிகள் பலனடையலாம் என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**தொழிலாளர்கள் பற்றாக்குறையை சமாளிக்க புதிய பண்ணைக் கருவிகள் அவசியம்: வேளாண் பல்கலைக்கழக துணை வேந்தர் வலியுறுத்தல்**

First Published : 06 May 2010 09:47:22 AM IST

கோவை, மே5: விவசாயத் தொழிலாளர்களின் பற்றாக்குறையைச் சமாளிக்க புதிய பண்ணைக் கருவிகள் அறிமுகம் செய்ய வேண்டியது அவசியம் என்று வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ப.முருகேசபூபதி வலியுறுத்தினார்.

வேளாண் பல்கலை. கண்டுபிடித்துள்ள செம்மைநெல் சாகுபடிக்கான விசைக் களையெடுப்பான், வணிகப்படுத்தும் வகையில் பிரிமியர் பவர் எக்யூப்மெண்ட்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த விசைக் களையெடுப் பானின் அறிமுக விழா வேளாண் பல்கலை.யில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் துணைவேந்தர் முருகேசபூபதி பேசியது:

வேளாண் பல்கலைக்கழகம் இதுவரை 746 பயிர் ரகங்களை வெளியிட்டுள்ளது. 146 பண்ணைக் கருவிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. விவசாயப் பணிக்கு கூலி ஆட்கள் கிடைப்பதில்லை. அவ்வாறு இருந்தாலும் அதிக செலவாகிறது. கரும்பு சாகுபடியில் உற்பத்திச் செலவில் 50 சதம் வெட்டுக்கூலிக்குச் சென்றுவிடுகிறது. இதுபோன்ற காரணங்களால் வேளாண் உற்பத்தி குறைந்து வருகிறது. ஆகவே, புதிய பண்ணைக் கருவிகளைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியமா கிறது.

நம் நாட்டில் பெரும்பகுதியினர் சிறு, குறு விவசாயிகள் என்பதால் அவர்கள் பயன்படுத்தும் வகையில் சிறிய அளவி லான பண்ணைக் கருவிகளை அறிமுகம் செய்ய வேண்டும்.

வேளாண் கருவிகளுக்காக விவசாயிகளுக்கு ரூ.55 கோடி மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் 15 சென்ட்}க்கு மேல் விவசாய நிலம் இருப்பதில்லை. இதனால் மொட்டை மாடியில் கூட அங்கு விவசாயம் செய்கின்றனர். இந்தியா வில் ஏராளமான விவசாய நிலம் இருக்கிறது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

"செம்மை நெல் சாகுபடியில் அதிக மகசூல் கிடைக்கிறது. இருப்பினும் இதில் களை எடுப்பதில் சிரமம் உள்ளது. இது வரை கையால் இயக்கப்படும் கருவி பயன்படுத்தப்பட்டது. விவசாயிகளின் சிரமத்தைப் போக்கும் வகையில் விசைக் களையெடுப்பானை வேளாண் பல்கலை. கண்டுபிடித்துள்ளது.
இதை விவசாயிகளுக்கு கொண்டு செல்லும் வகையில் கருடா பவர் வீடர் என்ற பெயரில் களையெடுப்பான் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் விலை ரூ.31 ஆயிரம். மானிய விலையாக விவசாயிகளுக்கு ரூ.15 ஆயிரத்து 500}க்கு வழங் கப்படும்' என்று பிரிமியர் பவர் எக்யூப்மெண்ட்ஸ் நிறுவன இயக்குநர் ஏ.ராஜ்குமார் தெரிவித்தார்.
வேளாண் பல்கலை. பதிவாளர் பி.சுப்பையன், ஆராய்ச்சி இயக்குநர் எம்.பரமாத்மா, வேளாண் பொறியியல் கல்லூரி முதல்வர் எஸ்.சந்தானபோஸ் உள்ளிட்ட பலர் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

தினமலர்

**வெளிநாடுகளிலிருந்து ஆண்டுக்கு 70 சதவீதம் கோ-கோ இறக்குமதி**

பொள்ளாச்சி : 'கோ-கோவிற்கு உலகளவில் தேவை இருந்தும், இந்தியாவில் போதிய உற்பத்தி இல்லாததால், வெளி நாடுகளிலிருந்து ஆண்டுக்கு 70 சதவீதம் கோ-கோ இறக்குமதி செய்யப்படுகிறது' என, கலந்துரையாடல் நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்டது.

ஆனைமலையில், தோட்டக்கலைத்துறை ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு, கோ- கோ சாகுபடி குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. ஆனைமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் சந்திரசேகரன் வரவேற்றார். 'கேட்பரீஸ்' நிறுவன மேலாளர் ராஜேஷ் தலைமை வகித்தார்.

ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் பேராசிரியர் ராஜமாணிக்கம் பேசியதாவது: தென்னையில், கோ-கோ சாகுபடி செய்வதின் மூலம் விவசாயிகள் அதிகளவு லாபம் பெற முடியும். சமீப காலமாக, கோ-கோவிற்கான தேவை அதிகரித்துள்ளது. ஆனால், இந்தியாவில் கோ-கோ குறைந்தளவு மட்டுமே சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில், 17 ஆயிரத்து 800 ஹெக்டேர் பரப்பில் கோ-கோ சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 10 ஆயிரம் டன் மட்டுமே உற்பத்தி பெற முடிகிறது.

கேரளாவில், அதிக பட்சமாக 71 சதவீதம் பரப்பில், 81 சதவீதம் கோ-கோ சாகுபடி செய்யப்பட்டுள்ளது. உலகளவில் கோ-கோவுக்கு 15 முதல் 20 சதவீதம் அதிக தேவை உள்ளது. ஆனால், சாகுபடி இல்லாததால், 60 முதல் 70 சதவீதம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் நிலை உள்ளது.'தமிழகத்தில், கோவை, கன்னியாகுமரி, நாகர்கோவில், ஈரோடு, சேலம், நாமக்கல், வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் கோ-கோ சாகுபடி அதிகளவில் செய்யப்படுகிறது. தமிழகத்தில், மொத்தம் இரண்டாயிரத்து 500 ஹெக்டேர் பரப்பில் மட்டுமே கோ-கோ பயிரிடப்பட்டுள்ளது. இதில், 200 டன் உலர் விதை உற்பத்தி செய்யப்படுகிறது. கோ-கோ மற்றும் தென்னையில், செவ்வெறும்பு அதிகளவில் தாக்குகிறது. இவற்றால், மரத்திற்கும், பயிருக்கும் பாதிப்பு ஏற்படாது. ஆனால், மரம் ஏறுபவர்களுக்கு இதன்மூலம் பாதிப்பு ஏற்படலாம். எனவே, மற்ற மரங்களிலிருந்து உருவாகும், இவ்வகை எறும்பின் கூட்டை கண்டுபிடித்து அவற்றை முழுமையாக அழிக்க வேண்டும்.

பொள்ளாச்சி பகுதியில், கோ- கோ பயிர்களில், கள்ளிபூச்சி, மாவு பூச்சி, தேயிலை நாக்கு பூச்சி, அணில் மற்றும் எலி ஆகியவற்றின் தாக்குதல் அதிகளவில் உள்ளது. இதில், அணில் மற்றும் எலி ஆகியவை பயிர்களை சேதப்படுத்துவதன் மூலம் 30 சதவீதம் உற்பத்தி பாதிக்கப்படும். இவற்றை கட்டுபடுத்த வழிமுறைகள் உள்ளன. வேளாண் துறை பேராசிரியர்களை அணுகினால், தகுந்த ஆலோசனை வழங்கப்படும் அதை கொண்டு இவற்றை கட்டுபடுத்ததலாம். இவ்வாறு, பேராசிரியர் ராஜமாணிக்கம் பேசினார்.

கூட்டத்தில் கோவை வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள், கேரளா மாநிலம் திருச்சூர் வேளாண்மை பல்கலைக்கழக வல்லுனர் கள் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

**விவசாயிகள் சங்க கூட்டம்**

ஈரோடு: பெருந்துறையில் அத்திக்கடவு, அவினாசி, பெருந்துறை வாய்க்கால் திட்ட விவசாயிகள் சங்க கூட்டம் நடந்தது.சங்கத் தலைவர் சாமியப்பன் தலைமை வகித்தார். ஊத்துக்குளி ஒன்றிய பொறுப்பாளர் செந்தில் முன்னிலை வகித்தார். கோவை செம்மொழி மாநாட்டில் கலந்து கொள்வது என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.பெருந்துறை, திருப்பூர், அவினாசி தாலுகாவில் இரண்டாண்டாக மழையின்றி வறட்சி ஏற்பட்டு, நிலத்தடி நீர்மட்டம் 1,000 அடி வரை சென்று விட்டது.

விவசாயிகள் மட்டுமின்றி பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். நான்காண்டாக மானாவாரி பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டு விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். மேலும், இந்த பகுதிகளை வறட்சி பகுதிகளாக அறிவிக்க வேண்டும் என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சங்க துணை செயலாளர் ராஜூ நன்றி கூறினார்.

**உழவர் சந்தையில் ரூ.18 லட்சம் வியாபாரம்**

பெருந்துறை: பெருந்துறை உழவர் சந்தைக்கு பெருந்துறை, சென்னிமலை வட்டாரங்களில் இருந்து அதிகாலை 5 மணி முதல் புத்தம் புதிய காய்கறிகள், கீரை வகைகள் மற்றும் பழங்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.உழவர் சந்தையில் 40 கடைகள் உள்ளன. ஏப்ரல் மாதம் 1,329 உழவர்கள் ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 315 கிலோ காய்கறிகளை கொண்டு வந்து, அதை 18 லட்சத்து 50 ஆயிரத்து 429 ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளனர். 27 ஆயிரம் நுகர்வோர் வாங்கி சென்றுள்ளனர். இத்தகவலை பெருந்துறை உழவர் சந்தை நிர்வாக அலுவலர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

**அவிநாசி அத்திக்கடவு திட்டம் கோரி விவசாயிகள் மறியல்**

கோபிசெட்டிபாளையம்: அத்திகடவு- அவிநாசி திட்டம் உள்பட பல்வேறு கோரிக்கைளை வலியுறுத்தி, கோபியில் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் மறியல் நடந்தது. கோபி தாலுகா அலுவலகம் முன்பிருந்து ஊர்வலமாக புறப்பட்ட விவசாய சங்கத்தினர், அரசு மருத்துவமனை பிரிவு ரோட்டில் அமர்ந்து கோரிக்கைளை நிறைவேற்றக்கோரி மறியலில் ஈடுப்பட்டனர்.

கோபி தாலுகா தலைவர் பழனிசாமி, செயலாளர் வெங்கிடுசாமி, சத்தி தாலுகா செயலாளர் விஜயகுமார், பவானி தாலுகா தலைவர் அய்யாவு, பொருளாளர் கதிர்வேல், தொழிலாளர் சங்க தாலுக்கா செயலாளர் மாணிக்கம், மார்க்சிஸ்ட் கட்சி தாலுகா செயலாளர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பயிர்க்கடன் இலக்கு: கூட்டுறவு வங்கி நிர்ணயம்**

ஈரோடு: ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சார்பில், நடப்பாண்டுக்கான பயிர்க்கடன் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு (2010-11) பயிர்க்கடன் அளவு விகிதங்கள் இறுதி செய்ய மாவட்ட அளவிலான குழு கூட்டம் சில மாதங்களுக்கு முன் மத்திய கூட்டுறவு வங்கியில் நடந்தது. அதன் பரிந்துரைகள் மாநில அளவிலான தொழில்நுட்ப குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதன்படி, ஈரோடு மாவட்டத்துக்கு பயிர்க்கடன் அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முக்கிய பயிர்களான மஞ்சள் பயிருக்கு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய், சர்க்கரை ஆலையில் பதிவு செய்யப்பட்ட கரும்பு பயிர் சாகுபடிக்கு ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபாய், வாழை சாகுபடிக்கு 32 ஆயிரத்து 500 ரூபாய், குச்சிக்கிழங்கு 11 ஆயிரம் ரூபாய், கடலை 10 ஆயிரத்து 500 மற்றும் நெல் 13 ஆயிரம் ரூபாய் என கடன் விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலமும், இதர வணிக வங்கிகளுக்கு மாவட்ட முன்னோடி வங்கி மூலமும் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு ஈரோடு மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஆண்டுக்கடன் திட்டப்படி, பயிர்க்கடன் அளவாக 82.86 கோடி நிர்ணயிக்கப்பட்டதில், 149.20 கோடி அளவுக்கு பயிர்க்கடன் வழங்கி 80 சதவீதம் குறியீடு எட்டப்பட்டுள்ளது. இத்தகவலை வங்கி தனி அலுவலர் லோகநாதன் தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடனுக்கு வட்டி குறைப்பு பாரத ஸ்டேட் பாங்க் மத்திய குழுமம் இயக்குனர் தகவல்**

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் அடுத்த முசரவாக்கம் கிராமத்தில் பாரத ஸ்டேட் பாங்க் சார்பில், 'நமது கிராமம்' திட்டம் துவக்க விழா நடந்தது.பாரத ஸ்டேட் பாங்க் ஒவ்வொரு மண்டலத்திலும் இரண்டு கிராமங்களை, 'நமது கிராமம்' திட்டத்தின் கீழ் தத்தெடுத்து வருகிறது. தத்தெடுக்கும் கிராமங்களில் வசிக்கும் அனைத்து வீடுகளுக்கும், வங்கியில் கணக்கு துவக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு வங்கிக் கடன் குறைந்த வட்டியில் வழங்கப்படுகிறது.வேளாண் கடன் தவிர பிற தேவைகளுக்கும் கடன் வழங்கப்படுகிறது. இது தவிர, பல்வேறு சமூகப் பணிகளும் வங்கி சார்பில் மேற்கொள்ளப்படும். சென்னை மண்டலம் சார்பில் காஞ்சிபுரம் அடுத்த முசரவாக்கம் கிராமம், திருவண்ணாமலை மாவட்டத்தில் பாடகம் கிராமம் ஆகியவை இந்த ஆண்டு தத்து எடுக்கப் பட்டுள்ளது.முசரவாக்கம் கிராமத்தில் நேற்று, 'நமது கிராமம்' திட்டம் துவக்க விழா நடந் தது. விழாவையொட்டி காலை காஞ்சிபுரம் மாவட்ட கால்நடைத் துறை சார்பில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது.
அதன் பின் நடந்த திட்டம் துவக்க விழாவிற்கு, வங்கி பொது மேலாளர் கண்ணன் தலைமை தாங்கினார். துணை பொது மேலாளர் ஜோசப் மேத்யூ வாழ்த்துரை வழங்கினார். பாரத ஸ்டேட் பாங்க் மத்தியக் குழுமம் இயக்குனர் பலோசி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். திட்டம் துவக்க விழாவையொட்டி, முசரவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த 9 பெண் குழந்தைகளை வங்கி தத்தெடுத்தது.அவர்கள் படிப்பு செலவை வங்கி ஏற் றுக்கொள்ளும் என அறிவிக்கப்பட்டது. வங்கி மத்தியக் குழுமம் இயக்குனர் பலோசி நிருபர்களிடம் கூறும்போது, தமிழக விவசாயிகள் கடின உழைப்பாளிகளாக உள்ளனர். கிராமப்புற விவசாயிகள் பயன் பெற வேண்டும் என்பதற்காக விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகைக்கான வட்டி 7 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்றார்.

மின் திருட்டு
முசரவாக்கம் கிராமத்தில் உள்ள மந்தைவெளியில், பாரத ஸ்டேட் பாங்க் சார்பில் நமது கிராமம் திட்டம் துவக்க விழா

நடந்தது. விழாவிற்காக பெரிய பந்தல் போடப்பட்டிருந்தது. மின்சாரத்திற்காக ஜெனரேட்டர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதை இயக்காமல் மின்சார கம்பியில் கொக்கி போட்டு மின்சாரம் திருடப்பட்டது.

**விவசாயிக்கு ஆலோசனை வழங்கலில் வேளாண் துறை அலுவலர் மெத்தனம்**

குளித்தலை: விவசாயிகளின் தேவைகளை விசாரிப்பதிலும், சாகுபடி குறித்து ஆலோசனை வழங்குவதிலும் வேளாண்துறை அலுவலர்கள் மெத்தனமாக உள்ளதாக குளித்தலை பகுதியில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. குளித்தலை காவிரி பாசனம் மற்றும் கட்டளை மேட்டு வாய்க்கால் பாசன பகுதியில் நெல் சாகுபடி அறுவடைக்கு தயாராகிவருகிறது. ஆனால், கடுமையான கோடை வெயில் மற்றும் தரமற்ற உரம், பூச்சி மருந்துகளால் எதிர்பார்க்கும் அளவு அறுவடை இருக்குமா? என்று விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

கிராமங்களில் குறிப்பிட்ட பகுதிக்கு தினசரி வேளாண்அலுவலர், விரிவாக்க அலுவலர்கள் விவசாயிகளை சந்தித்து குறைகள் குறித்து விசாரித்து, ஆலோசனை வழங்கிவந்தனர். பரிந்துரைப்படி உரம் மற்றும் பூச்சிமருந்து பயன்படுத்தி விவசாயிகளும் பயனடைந்தனர். தற்போது கடந்த மூன்றாண்டாக வேளாண் அலுவலர் எவரும் குளித்தலையில் கிராமப்புறங்களில் விவசாயிகளை சந்திப்பதில்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதனால், தரமற்ற உரம் மற்றும் பூச்சி மருந்து பயன்படுத்தி விவசாயிகளும் பாதிக்கப் படுகின்றனர். வேளாண்துறை திட்டங்கள் மற்றும் அரசு மானியங்கள்குறித்தும் முறையாக விவசாயிகளுக்கு தெரிவிப்பதில்லை என்றும் விவசாயிகள் புகார் கூறுகின்றனர். வேளாண் துறை அலுவலர்கள் தங்களுக்கு அறிமுகமான சில விவசாயிகளை மட்டும் அழைத்துக் கூட்டம் நடத்தி பதிவு செய்து, மாவட்ட நிர்வாகத்துக்கு அனுப்பி தங்கள் கடமையை முடித்துக்கொள்வதாக கூறப்படுகிறது.

பெரும்பான்மைஅலுவலர்கள், விவசாயிகளிடம்தொடர்பேஇல்லாமல், அலுவலகத்திலேயே பணியை முடித்துக்கொள்வதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர். விவசாயிகளின் புகார் குறித்து மாவட்ட நிர்வாகம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாகும்.

**பயிர்களை பாதிக்கும் எலிகள் வேளாண் அதிகாரி அறிவுரை**

கிருஷ்ணகிரி: 'கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நவரை நெல் அறுவடை நடந்து வரும் நிலையில் பயிர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எலிகளை கட்டுப்படுத்த வேண்டும்' என்று வேளாண் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

வேளாண் இணை இயக்குனர் ராஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களை வயல் எலி, புல் எலி மற்றும் வயல் சுண்டெலி ஆகியவை சேதம் விளைவிக்கின்றன. நெற்பயிரில் அதிக சேதாரம் விளை விப்பதில் எலிகள் முக்கியமாக உள்ளன. நெற்பயிரின் அனைத்து வளர்ச்சி நிலைகளும் எலிகளின் பாதிப்புக்குள்ளாவதால், 5 முதல் 10 சதவீதம் மகசூல் குறைகிறது.கரும்பு, பருத்தி, தென்னை போன்ற பயிர்களையும் எலிகள் சேதப்படுத்துகின்றன.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நவரை பருவத்தில் 7,800 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர் அறுவடை செய்யும் பணிகள் நடந்து வரும் நிலையில் விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு எலிகளை கட்டுப்படுத்த வேண்டும். எலி வலைகள் வயல் வரப்புகளில் அதிகம் காணப்படுவதாலும், நெல் அறுவடை சமயத்தில் எலிகள் குட்டி போட்டு பெருகும் காரணத்தாலும் இந்த தருணத்தில் வரப்புகளை வெட்டினால் எலிகளையும் அவற்றின் குட்டிகளையும் எளிதில் பிடித்து அழிக்கலாம்.

வயல் வெளிகளில் வரப்புகளை அமைக்கும் போது அவை அதிக அகலமும், உயரமும் இல்லாமல் சிறிய அளவில் அமைக்க வேண்டும். மேலும் வயல் வெளிகளில் முதுகு ஒடிக்கும் பொறி, விந்தைபொறி ஆகியவற்றை வைத்தும் எலிகளை அழிக்கலாம். வயல்வெளிகளில் உள்ள மாமிச பட்சிகளான பாம்பு, கீரிப்பிள்ளை, ஆந்தை ஆகியவற்றை அழிக்காமல் விடவேண்டும்.

ரசாயன கொல்லிகள் மூலமும் எலிகளை கட்டுப்படுத்தலாம். ஜிங் பாஸ்பைடு மருந்தை எலிகள் விரும்பி உண்ணும் உணவில் கலந்து எலி வலைகள் உள்ள இடத்தில் வைக்க வேண்டும். வார்ஃபரின் மற்றும் புரோமோடைலோன் ஆகிய ரசாயன மருந்துகளை கொண்டும் எலிகளை கட்டுப்படுத்தலாம்.

ஆயக்கட்டு பகுதிகளான கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், பாரூர் மற்றும் அரசம்பட்டி பகுதிகளில் தற்போது நவரை நெல் அறுவடை நடந்து வரும் நிலையில் விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு எலிகளை கட்டுப்படுத்த வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**.மானிய விலையில் இயந்திரம் பொரங்காடு சீமை எதிர்பார்ப்பு**

கோத்தகிரி : 'பசுந்தேயிலை பறிக்கும் இயந்திரத்தை, மானிய விலையில், விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்' என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பொரங்காடு சீமை நலச்சங்க தலைவர் ராமகிருஷ்ணன், பொதுச் செயலர் காரிகவுடர், குன்னூர் தேயிலை வாரிய இயக்குனருக்கு அனுப்பியுள்ள மனு: நீலகிரி மாவட்டத்தில் 60 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் தேயிலைத் தோட்டங்கள் உள்ளன; சிறு விவசாயிகளுக்கு, 20 ஆயிரம் எக்டேர் பரப்பில் தோட்டம் உள்ளன. தரமான பசுந்தேயிலை பறிப்பது குறித்து, தேயிலை வாரியம் மற்றும் உபாசி சார்பில் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வால், பெரும்பாலான விவசாயிகள், தரமான பசுந்தேயிலையை மட்டுமே வினியோகிக்கின்றனர்.தொழிலாளர் பற்றாக்குறையால், குறித்த நேரத்தில் பசுந்தேயிலை பறிக்க முடியாத நிலையில், தரமான பசுந்தேயிலை, தோட்டங்களிலேயே முதிர்ந்து விடுவதால், விவசாயிகள் இழப்பை சந்திக்க வேண்டியுள்ளது.

தேயிலையின் தரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனில், பல திட்டங்களின் வாயிலாக, தரத்தை மேம்படுத்துவது அவசியமாக உள்ளது. தேயிலை விவசாயிகள் நலன் கருதி, தரமான பசுந்தேயிலையை மட்டுமே பறிக்கும் வகையில், எளிதில் பயன்படுத்தக் கூடிய பசுந்தேயிலை பறிக்கும் இயந்திரத்தை, 50 சதவீத மானிய விலையில், வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட சிறுதேயிலை விவசாயிகள் சங்கங்கள், சுய உதவிக் குழுக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, ராமகிருஷ்ணன், காரிகவுடர் கூறியுள்ளனர்.

**பயிர்காப்பீட்டு திட்ட 10 சத நிலுவைத்தொகை விவசாயிகளுக்கு இன்று முதல் விநியோகம்**

தஞ்சாவூர்: தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 2008 ராபி பருவம் பயிர்க் காப்பீட்டுத் தொகையில் 10 சதவீத நிலுவைத் தொகை தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களின் மூலம் விவசாயிகளுக்கு இன்று (7ம் தேதி) முதல் வழங்கப்படவுள்ளது.இது குறித்து கலெக்டர் சண்முகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு; தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் 2008 ராபி பருவத்தில் காப்பீடு செய்தவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட காப்பீட்டுத்

தொகையில் ஏற்கெனவே 90 சதவீத தொகை ரூபாய் 63.29 கோடி 62 ஆயிரத்து 364 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. நிலுவையிலுள்ள 10 சதவீத தொகை ரூபாய் 7.28 கோடி தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களின் மூலம் விவசாயிகளுக்கு இன்று (7ம் தேதி) முதல் வழங்கப்படவுள்ளது.மேற்கண்ட விபரப்படி வழங்கப்பட்ட பயிர் காப்பீட்டுத் தொகை பெற்றவர்கள் அனைவரும் தொடர்புடைய தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் தற்போது வழங்கப்பட உள்ள நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.கடன் பெற்ற விவசாயிகளுக்கு இழப்பீட்டுத்தொகை அவர்களுடைய கடன் கணக்கில் வரவு வைக்கப்படும். அவ்வாறு வரவு வைக்கப்பட்டு மீதமுள்ள தொகை அவர்களுடைய சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்டு பட்டுவாடா செய்யப்படும்.பயிர்க் காப்பீட்டு நிலுவைத் தொகை பெறுவதில் விவசாயிகளுக்கு ஏதேனும் சிரமங்கள் ஏற்படின் அந்தந்த வட்டாரத்தின் கூட்டுறவு கள அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.கூட்டுறவு கள அலுவலர்கள்:தஞ்சாவூர், 97891-13457, திருவையாறு 96554-56572, பூதலூர் 94431- 27528, அம்மாபேட்டை 94866-09690, திருப்பனந்தாள் 96778-44930, பாபநாசம் 94866-55945, கும்பகோணம் 99523 21069, திருவிடைமருதூர் 98435-11993,ற பட்டுக்கோட்டை 94421-65189, மதுக்கூர் 98654-10863, பேராவூரணி 04373 - 257231, சேதுபாவாசத்திரம் 99421-54018, திருவோணம் 99435-88055, ஒரத்தநாடு 98941-69380.இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**தண்ணீர் தட்டுப்பாடு; காய்கறி விளைச்சல் பாதிப்பு**

தாராபுரம் : தாராபுரம் மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களில் தண்ணீர் பற்றாக் குறையால், காய்கறி, கீரை வகைகள் விளைச்சல் குறைந்துள்ளது; உழவர் சந்தைக்கு எதிர்பார்த்த அளவு காய்கறி வரத்து இல்லாததால், பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

அமராவதி பழைய ஆயக்கட்டு பாசன வாய்க்கால் மூலம், தாராபுரம் மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. அமராவதி ஆற்றில் தொடர் நீரோட்டம் உள்ளபோது, கீரை, காய்கறிகள், நெல், கரும்பு பயிர் செய்து லாபம் ஈட்டிவந்தனர் இப்பகுதி விவசாயிகள்.

தற்போது ஆற்றில் நீரோட்டம் தடைபட்டு, கிணறுகளில் நீர் இருப்பு குறைந்துள்ளது. கிணற்றுப்பாசனம் மூலம் பயிரிட்ட தக்காளி, கத்தரி, வெண்டை உட்பட பல்வேறு பயிர்களுக்கு போதிய தண்ணீர் கிடைக்காததால், விளைச்சல் குறைந்துள்ளது; நோய் தாக்கம் அதிகரித்துள்ளது. தண்ணீர் பற்றாக்குறையால், கீரை வகைகளில் வெண்மை படர்ந்து, சுவை குன்றியுள்ளது.

இதனால், தாராபுரம் உழவர் சந்தைக்கு வழக்கத்தைவிட, தற்போது காய்கறிகள் வரத்து மிகவும் குறைந்துள்ளது. முள்ளங்கி, பீட்ரூட், தக்காளி, கொத்தமல்லி, பீர்க்கங்காய், அவரை உள்ளிட்ட காய்கறிகள் வரத்து இல்லாததால், எதிர்பார்த்து வரும் காய்கறிகள் கிடைக்காமல், பொதுமக்கள் ஏமாற்றத் துடன் திரும்பிச் செல்கின்றனர்.

---

**பருத்தி வரத்து தொடர்ந்து குறைவு**

அவிநாசி : அவிநாசியில் நடந்த பருத்தி ஏலத்துக்கு இந்த வாரமும் வரத்து குறைந்திருந்தது; விலையிலும் இறக்கம் காணப்பட்டது.

---

அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்துக்கு 800 மூட்டைகள் வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 400 மூட்டை குறைவு. வரத்து குறைந்துள்ள நிலையில், அனைத்து ரக பருத்தியின் விலையும் குவிண்டாலுக்கு ரூ.100 முதல் ரூ.400 வரை குறைந்துள்ளது.

இந்த வார ஏலத்தில் அனைத்து ரக பருத்தி விலை விபரம் குவிண்டாலுக்கு) வருமாறு: எல்.ஆர்.ஏ., ரூ.2,500 முதல் ரூ.3,000 வரை, ஆர்.சி.எச்., ரூ.2,700 முதல் ரூ.3,150 வரை, டி.சி.எச்., ரூ.3,000 முதல் ரூ.3,800 வரை, மட்டம் ரூ.1,700 முதல் ரூ.2,000 வரை.

லம் குறித்து அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது: இந்த வாரமும் கடந்த வாரத்தை விட, 400 மூட்டை வரத்து குறைந்துள்ளது. புதிய ரகம் வரத்தில்லை. திருச்சி, தர்மபுரி வட்டாரத்தில் இருந்து மட்டுமே பருத்தி வருகிறது. இந்த வார ஏலத்தில், அனைத்து ரக பருத்தியும் குவிண்டாலுக்கு கடந்த வாரத்தை விட ரூ.400 வரை குறைவாக ஏலம் போனது. பென்னி ரகம் வரத்தில்லை. மொத்தம் ரூ.8.80 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது, என்றார்.

**மானிய திட்டங்களை விவசாயிகள் அறிய வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகலாம்**

உடுமலை : 'தென்னை மற்றும் பயறு வகை பயிர்களுக்கு அரசு செயல்படுத்தும் பல்வேறு மானியத்திட்டங்கள் குறித்து அறிய விவசாயிகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுக வேண்டும்', என வேளாண்மைய உதவி இயக்குநர் சைலஸ் தெரிவித்துள்ளார்.

பெதப்பம்பட்டி வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. ஒன்றிய அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் வேளாண் விரிவாக்க மையத்தில் தட்டை, உளுந்து, கொண்டைக்கடலை மற்றும் மக்காச்சோள விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மானிய விலையில் விதைகள் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது.

இது குறித்து வேளாண் உதவி இயக்குநர் சைலஸ் வெளியிட்டுள்ள அறிக்கை: விதை கிராம திட்டத்தின் கீழ் விதைப்பண்ணைகள் அமைக்க உளுந்து, கொண்டைக்கடலை விதைகள் கிலோவிற்கு 20 ரூபாய் மானியத்தில் வழங்கப்படுகிறது. அறுவடை செய்த தானியங்களை சேகரித்து வைக்க ஒரு டன் கொள்ளளவு உடைய பிளாஸ்டிக் சேமிப்பு கலன்கள் ஆயிரம் ரூபாய் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பிற்காக 'அசார்டிராக்டின் புரபனோபாஸ்' மற்றும் 'டிரைகோடெர்மா விரிடி', மருந்துகள் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டசத்து நிர்வாகத்திற்காக பயிறு வகை நுண்ணூட்டம், இரும்பினால் செய்யப்பட்ட ஒரு டன் அளவு கொண்ட விதை சேமிப்பு கலன்கள் 50 சதவீத மானியத்தில் கிடைக்கும்.

ஐசோபாம் பயறு வகை திட்டத்தின் கீழ் பயறு வகை பயிர்களில் பூக்கும் மற்றும் காய் பிடிப்பு திறனை அதிகரிக்க டி.ஏ.பி., தெளிப்பு ஒரு எக்டருக்கு நூறு ரூபாய் மானியத்தில் வழங்கப்படுகிறது. 5 எக்டர் செயல்விளக்க திடல்கள் அமைக்க எக்டருக்கு 400 ரூபாய் மானிய விலையில் வழங்க தட்டை மற்றும் உளுந்து விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தென்னையை தாக்கும் செம்பான் சிலந்தியை கட்டுப்படுத்த ஒரு சத அசார்டிராக்டின் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. தென்னை மற்றும் பயறு வகை நுண்ணூட்டங்கள் உயிர் உரங்கள் மற்றும் உயிரியியல் காரணிகள்

மானிய விலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் பெதப்பம்பட்டி வட் டார வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு பயன் பெற வேண்டும். இவ்வாறு அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வறட்சியால் பாதித்த கரும்பு பயிர்களைசர்க்கரை ஆலை தனி அலுவலர் ஆய்வு**

ஆரணி:ஆரணி தாலுகாவில், வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு பயிரை தனிஅலுவலர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.ஆரணி தாலுகாவில் முள்ளிப்பட்டு, ஆதனூர், மாமண்டூர், வெள்ளேரி, புலவன்பாடி ஆகிய கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்த கரும்பு பயிர்கள் இப்போது வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ளது. இது குறித்து ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை தனி அலுவலருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, அவருடைய உத்தரவின் பேரில், ஆரணி கோட்ட தலைமை கரும்பு அலுவலர் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில் முள்ளிப்பட்டு, ஆதனூர், மாமண்டூர் உட்பட பல கிராமங்களில் இருந்து 50க்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.கூட்டத்தில், தலைமை கரும்பு அலுவலர் ராஜேந்திரன் பேசியதாவது:

ஒரு ஏக்கருக்கு 2.5 சதவிகித பொட்டாஷ் கரைசலை தெளிக்க வேண்டும். 2.5 கிலோ யூரியாவுடன், 2.5 கிலோ பொட்டாஷ் உரத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து வறட்சியால் பாதிக்கப்பட்ட 3 மாத வயதுடைய பயிர்கள் மீது சோகைகள் நன்கு நனையும்படி, கைத்தெளிப்பான் கொண்டு மாலை நேரத்தில் தெளிப்பதன் மூலம் கரும்பு பயிர் போதுமான வரை காயாமல் பசுமையாக காணப்படும்.

இம்முறையை 15 நாட்களுக்கு ஒரு முறை செய்ய வேண்டும். மேலும், ஒரு ஏக்கருக்கு கூடுதலாக 50 கிலோ 'மூரியேட் ஆப் பொட்டாஷ்' நேரடியாக கரும்பு வயலில் இட்டு, மண் அணைத்தாலும் வறட்சி பிடியில் இருந்து கரும்பை காப்பாற்றலாம்.இவ்வாறு அவர் பேசினார்.நிகழ்ச்சியில், ஆரணி கோட்ட கரும்பு அலுவலர் வேலாயுதம், களப்பணியாளர்கள் தனபால், கிருஷ்ணமூர்த்தி, ஞானசேகரன், ஆனந்தன், கலையரசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பருத்தி சாகுபடி குறைவால் அரவை ஆலைகள் நலிவு : தொழில் விருத்தியடைய அரசு உதவுமா**

ராஜபாளையம் : ராஜபாளையம் வட்டாரத்தில் பருத்தி சாகுபடி பரப்பளவு குறைந்து வருவதால், அதை நம்பி செயல்பட்டுவந்த அரவை ஆலைகள் ('ஜின்னிங் பேக்டரி') நலிவடைந்து வருகின்றன.

ராஜபாளையத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக பருத்தி அரவை தொழில் சிறப்பாக செயல்பட்டு வந்தது. துவக்கத்தில் 80க்கும் மேற்பட்ட ஜின்னிங் ஆலைகள் இருந்தன. 1996க்கு பின், பருத்தி சாகுபடி குறையத் துவங்கியது. தற்போது 16 ஆலைகள் மட்டுமே செயல்படுகின்றன. அதுவும் ஆண்டிற்கு நான்கு மாதங்கள் மட்டுமே முழுமையாக செயல்படுகிறது. விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் மூலமாக பருத்தியை கொள்முதல் செய்து, ஜின்னிங் ஆலைகளில் கொட்டை நீக்கி தூய பஞ்சாக மாற்றி நூற்பாலைகளுக்கு சப்ளை செய்யப்படுகிறது. ஜின்னிங் ஆலைகள் குறைந்துவிட்டதையடுத்து, வெளிமாவட்டங்கள், வெளி மாநிலங்களிலிருந்து பஞ்சை, நூற்பாலைகள் கொள்முதல் செய்கின்றன.

டி.வி.சி. ஜின்னிங் ஆலை உரிமையாளர் கண்ணப்பன் கூறியதாவது: திருச்சி, கோவை, ஆந்திரா போன்ற பகுதிகளிலிருந்து பருத்தியை கொள்முதல் செய்து தொழில் நடத்தினோம். போக்குவரத்து செலவு அதிகரித்ததால், அதுவும் கட்டுப்பாடியாகவில்லை. வரி உயர்வு, மின்சாரம், ஆட்கள் பற்றாக்குறை போன்றவையும் ஜின்னிங் தொழிலை பாதித்துள்ளது, என்றார்.

பஞ்சு வியாபாரி ராமகிருஷ்ண ராஜா கூறியதாவது: பி.டி., ரக பருத்தியை ஆந்திரா போன்ற பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்து வருகிறோம். லாரி வாடகை, ஆட்கள் கூலி உள்ளிட்ட செலவினங்களால் பஞ்சு உற்பத்தி செலவு அதிகமாகிவிட்டது, என்றார்.

சாகுபடி குறைவுக்கான காரணம்: பருத்தியில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த அதிகளவில் பூச்சி மருந்து அடிக்க வேண்டியிருப்பதால், செலவு அதிகமாகிவிட்டது. பருத்தி சாகுபடிக்கு கூலி ஆட்கள் கிடைப்பது கடினமாக உள்ளது. மார்க்கெட்டில் எதிர்பார்த்த விலை கிடைப்பதில்லை. இதனால், பருத்தி விவசாயிகள் பலர், மக்காச்சோளம் மற்றும் சிறு தானிய பயறு வகை சாகுபடிக்கு மாறிவிட்டனர். மாவட்ட அளவில் 10 ஆண்டுகளுக்கு முன் 40 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் இருந்த பருத்தி சாகுபடி, தற்போது 8 ஆயிரம் எக்டேராக சுருங்கிவிட்டது.

விவசாய அதிகாரிகள் கூறியதாவது: ராஜபாளையம் காலநிலைக்கு பி.டி., பருத்தி ரகம் ஏற்றதல்ல. ஓரளவு கூடுதல் விளைச்சல் தரக்கூடிய 'எஸ்.வி.பி.ஆர்., 2' என்ற ரகத்தை விவசாயிகள் பயிரிட வேண்டும், என்றனர்.பருவ நிலையும், அரசும் கை கொடுத்தால் மட்டுமே ராஜபாளையம் வட்டார பகுதியில் பருத்தி உற்பத்தியை பெருக்க முடியும். அதை சார்ந்துள்ள தொழில்களையும் காப்பாற்ற முடியும்.

---

## விலைவாசி குறையும் வரையில் கோதுமை ஏற்றுமதி மீதான தடை நீடிக்கும்



*அமிதி சென் – பிரபா ஜெகன்னாதன்*

*புதுடெல்லி*

*உணவு பொருள்களுக்கான பணவீக்கம் குறையும் வரையில் கோதுமை ஏற்றுமதி மீதான தடை நீடிக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே குறைந்த கால அடிப்படையில், நம் நாட்டிலிருந்து கோதுமை ஏற்றுமதி செய்யப்பட வாய்ப்பில்லை. மத்திய வர்த்தக அமைச்சகம் கோதுமை ஏற்றுமதிக்கு ஆதரவாக உள்ள நிலையிலும் அரசு இந்த விஷயத்தில் தொடர்ந்து கவனத்துடன் செயல்பட விரும்புகிறது.*

*தடை விதிப்பு*

*உள்நாட்டில் உற்பத்தி குறைந்ததால், கையிருப்பை அதிகரிக்கும் வகையில், கடந்த 2007–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கோதுமை ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்தது. அதற்குப் பின்னர் உலக அளவிலும் கோதுமை உற்பத்தி சரிவடைந்ததாலும், உள்நாட்டில் உணவு தானியங்கள் விலை அதிகரிக்கத் தொடங்கியதாலும் ஏற்றுமதி*

மீதான தடை நீடித்தது.
தற்போது நம் நாட்டில் கோதுமை உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. கோதுமை கையிருப்பும் அதிகமாக உள்ளது. எனவே ஏற்றுமதிக்கு மீண்டும் அனுமதிப்பதால் பாதிப்பு ஏற்படாது என்ற நிலை உள்ளது. எனினும் தற்போது சர்வதேச சந்தையில் கோதுமை விலை குறைவாக உள்ளது. எனவே இப்போது ஏற்றுமதி மேற்கொள்வது அதிக ஆதாயமளிப்பதாக இருக்காது. இதுவும், ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதிக்காததற்கு முக்கிய காரணமாகும்.

கொள்முதல்

அதே சமயம் உள்நாட்டில் கோதுமை உற்பத்தி உயர்ந்துள்ளதால், இந்திய உணவுக் கழகத்தின் கோதுமை கொள்முதல் சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது. கையிருப்பு, கொள்முதல் அதிகரிப்பால் அரசு சேமிப்புக் கிடங்குகளில் கோதுமை நிரம்பி வழிகிறது. ஏப்ரல் மாதம் 1–ந் தேதி அன்று கோதுமை சந்தைப்படுத்துதல் பருவம் தொடங்கியது. இப்பருவத்தில், மே 5–ந் தேதி வரையிலான காலத்தில், இந்திய உணவுக் கழகம் 2.04 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்துள்ளது.
இந்நிலையில், மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த ரபி பருவத்தில் கோதுமை எந்த அளவு உற்பத்தி ஆகியுள்ளது, கையிருப்பு, நடப்பு ஆண்டு பருவத்தில் உணவு தானியங்களின் உற்பத்தி குறித்த முன்கூட்டிய மதிப்பீடுகள் போன்ற பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து, மத்திய அரசு கோதுமை ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கும் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஊட்டியில் ரோஜா கண்காட்சி, கோடை விழா

## அமைச்சர் ராமச்சந்திரன் நாளை தொடங்கி வைக்கிறார்

ஊட்டி, மே.7–

ஊட்டியில் ரோஜா கண்காட்சி மற்றும் கோடை விழா ஆகியவை நாளை (சனிக்கிழமை) தொடங்குகிறது. இதனை தமிழக கதர்வாரிய துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தொடங்கி வைக்கிறார்.

### ரோஜா பூங்கா

மலைகளின் அரசி என்று அழைக்கப்படும் நீலகிரி மாவட்டத்துக்கு பெருமை சேர்க்கும் வகையில் சர்வதேச அளவில் புகழ்மிக்க ரோஜா பூங்கா ஊட்டி விஜயநகரம் பகுதியில் அமைந்துள்ளது.

1995–ம் ஆண்டு ஊட்டியில் 100–வது மலர் கண்காட்சி நடைபெற்றதை முன்னிட்டு அன்றைய முதல்–அமைச்சர் ஜெயலலிதா நூற்றாண்டு ரோஜா பூங்காவை விஜய நகரம் பகுதியில் 10 ஏக்கர் நிலத்தில் தொடங்கி வைத்தார். ஆரம்ப காலத்தில் 1950 ரோஜா ரகங்களுடன் இந்த பூங்கா உருவானது. படிப்படியாக இந்த பூங்கா மேம்படுத்தப்பட்டது. தொடர்ந்து நீலகிரி ரோஜா சங்கம் உருவாக்கப்பட்டு தற்போது 3600 வகையான ரோஜா ரகங்களுடன் 30 ஆயிரம் ரோஜா மலர் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளது. இவைகள் அனைத்து வண்ண, வண்ண நிறங்களில் பூத்து குலுங்குகின்றன.

### கண்காட்சி

ஊட்டி சீசனை அனுபவிக்க வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் ஊட்டி ரோஜா பூங்காவில் 9–வது ரோஜா கண்காட்சி நாளை (சனிக்கிழமை) தொடங்குகிறது. நாளை காலை 8.30 மணிக்கு தமிழக கதர் வாரிய துறை அமைச்சர் ராமச்சந்திரன் கண்காட்சியை தொடங்கி வைக்கிறார். தொடர்ந்து காலை 10 மணிக்கு ரோஜா பூங்காவில் கோடை விழா தொடங்குகிறது.

இந்த விழாவையும் தமிழக கதர்வாரிய துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தொடங்கி வைக்கிறார். ரோஜா மலர் கண்காட்சி 2 நாட்கள் நடைபெறுகிறது.

### கலங்கரை விளக்கம்

கண்காட்சியில் ரோஜா மலர்களிலான கலங்கரை விளக்கம் அமைக்கப்படுகிறது. கிருஷ்ணகிரி, தர்மபுரி, கோவை மாவட்டத்தில் உள்ள ரோஜா மலர் உற்பத்தி அமைப்புகளின் சார்பில் தனி மலர் அரங்குகளும், ரோஜா மலரில் தயாரிக்கப்படும் ஜாம், ஜல்லி, ரோஸ் மில்க் போன்ற பல உணவு பொருட்களும் கண்காட்சியில் வைக்கப்பட உள்ளது.

மேலும் ரோஜா மலர் அலங்காரங்கள், கை பொக்கைகள், ரோஜா மலர் கோலம் போன்றவைகளும் இந்த கண்காட்சியில் இடம் பெறுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை நீலகிரி மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தலைமையில் தோட்டக்கலை உதவி இயக்குனர் ஜெகதீஷ் மற்றும் அதிகாரிகள் செய்து வருகின்றனர்.



ஊட்டி ரோஜா பூங்காவில் பூத்து குலுங்கும் ரோஜா மலர்களை கண்டு ரசிக்கும் சுற்றுலா பயணிகளின் கூட்டத்தின் ஒரு பகுதியை படத்தில் காணலாம்.